## கொரோனாவால் வாழ்வாதாரம் இழந்த

# பழங்குடியினருக்கு உழைப்பு கருவிகள்

காஞ்சிபுரம், நவ.5: கொரோனா ஊரடங்கால் வாழ்வாதாரம் இழந்த பழங்குடியின மக்களுக்கு, குழந்தைகள் கண்காணிப்பகம் அமைப்பு சார்பில் உழைப்புக் கருவிகளான மண்வெட்டி, கடப்பாறை வழங்கும் நிகழ்ச்சி காஞ்சிபுரத்தில் நடந்தது.

அமைப்பின் நிர்வாகி ராஜ் தலைமை தாங்கினார். காஞ்சிபுரம் வட்ட சட்டப்பணிகள் குழு உறுப்பினர் வழக்கறிஞர் ஜெயக்குமாரி, காஞ்சிபுரம் சுற்றுவட்டாரப் பகுதிகளான காரை, வெள்ளகுளம், பெரியகரும்பூர், இளையனார்வேலூர், வெங்கச்சேரி, மாகறல், புஞ்சையரசன்தாங்கல், விசார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 100 பழங்குடியின குடும்பத்தினருக்கு மண்வெட்டி, கடப்பாறை ஆகியவை வழங்கினார். முடிவில் ஒருங்கிணைப்பாளர் பத்மா மரியாள் நன்றி கூறினார்.